# முண்டாசுக் கவியின்

## பாப்பாப் பாடலில் முகாமைக் கருத்துகள்



**பாரதி கென்னடி**

மகுடம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முண்டாசுக் கவியின்

## பாப்பாப் பாடலில் முகாமைக் கருத்துகள்



பாரதி கென்னடி

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டாசுக்கவியின்

பாப்பாப் பாடலில் முகாமைக் கருத்துகள்

ஆசிரியர்-

**பாரதி கென்னடி ©**

பதிப்பு - மகுடம் பதிப்பகம்,

2020 - டிசம்பர்

நூல் வடிவமைப்பு - T. சங்கர்

வணசிங்க பிரிண்டர்ஸில் அச்சிடப்பட்டது

4964, திருமலை வீதி, மட்டக்களப்பு

ISBN 978-955-4041-25-7

**நன்றிகள்**

கலாநிதி ஜீவரெத்தினம் கென்னடி

திரு. S.A. ஜீவரெத்தினம்

திரு. மைக்கல் கொலின்

கலாநிதி. S. ஜெயராஜா

திரு. M. நோர்மன் ரவிக்குமார்

பாடுமீன் அரிமாக் கழக உறுப்பினர்கள்

306C2 அரிமாக் கழக அரிமாத் தலைவர்கள்

செல்வி. குருசாலினி கோகுலராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

மகாகவி பாரதியார் மீது
கொண்ட காதலால்
தன் மகளுக்குப் பாரதி என்று
பெயரிட்ட என் அப்பா
ஜோர்ச் சந்திர சேகரனுக்கும்,
என்னை பாரதி கண்ட
புதுமைப் பெண்ணாக வளர்த்த
எனது அம்மா ரஜனிதேவிக்கும்

**இக் கன்னிமுயற்சி சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 28வது வெளியீடாக கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி அவர்களின் "முண்டாசுக்கவியின் பாப்பாப் பாடலில் முகாமைக் கருத்துக்கள்" எனும் இச்சிறுநூலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்..

கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி இலங்கைக் கணக்காளர் சேவையில் *(SLAcS)* இலும் இலங்கை நிர்வாக சேவையிலும் *(SLAS)* கடமையாற்றி தற்போது கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார்.

இவர் தனது தொழில் ரீதியான சேவைக்கு அப்பால் எழுத்து, நடனம், நாடகம், இலக்கிய விமர்சனம், சமூக சேவை போன்ற துறைகளில் அதீத ஈடுபாடும், செயற்பாடும் கொண்டவர்.

சர்வதேச அரிமா கழகத்தின் 306C2 இல் 2020/2021ம் ஆண்டுக்கான பிராந்தியம் ஒன்பதில் பிராந்தியத் தலைவியாக தனது ஆக்க பூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் இவரின் "முண்டாசுக்கவியின் பாப்பாப் பாடலில் முகாமைக் கருத்துக்கள்" என்ற இச்சிறு நூல் பாரதியார் பாடல்களில் முகாமைக் கருத்துக்கள் என்ற ஓர் ஆய்வு முயற்சியின் ஆரம்பப் புள்ளியாகும்.

மகாகவிபாரதியார் உலகத் தமிழ் கவிஞர்களில் மிக முக்கியமானவர். காதல், கனிவு, அன்பு, பாசம், வீரம், பக்தி, தேசபக்தி போன்ற மனித வாழ்வியலின் அத்தனை விடயங்களையும் தனது பாடல்களில் கொண்டு வந்தவர் பாரதியார். குயில்பாட்டு மூலமாக பறவைகள், விலங்குகள் மீதும் நேசம் காட்டியவர் அவர்.

அவரது தேச விடுதலைப் பாடல்கள் அதிக முக்கியத்துவம் பெற்றவை. அளவில் ஏனைய துறைகளில் அவரது பாடல்கள் பற்றிய பார்வை முழுமையாக விசாலிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்நூல் பாரதியாரின் பாப்பா பாட்டில் முகாமைத்துவப் பண்புகளைத் தேடும் ஒரு முயற்சியாகும். அண்மைக்காலமாக ஆய்வாளர்கள் திருக்குறளில் கூட பல விஞ்ஞான கோட்பாடுகளை, நிர்வாகக் கோட்பாடுகளை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் பாரதியின் பாடல்களில் குறிப்பாக அவரது பாப்பா பாடலில் உள்ள முகாமைத்துவ சிந்தனைகள் பற்றி ஆய்வு செய்யும் இம் முயற்சி பாராட்டப்பட வேண்டியதே.

முகாமைத்துவ பட்டதாரியான கலாநிதி பாரதி கென்னடி தனது கல்விப்புலத்தின் பால் நின்று இப்பாடலை ஆய்வு செய்துள்ளார்.

இன்று முகாமைத்துவ கோட்பாடுகள் மிக முக்கியம் பெற்று வருகின்றன. ஒருவணிகத்தின் வெற்றிக்கு முகாமைத்துவம் மிக முக்கியமானது. ஆனால் வணிகத்துக்கு மட்டுமா முகாமைத்துவம். எமது நேரத்தை, ஏன் எமது வாழ்க்கையை கூட சரியான வகையில் முகாமை செய்தாலே வெற்றி பெறமுடியும். பாரதியாரின் பாப்பா பாடல்களில் முகாமைக் கருத்துக்கள் தொடர்பான இவ் ஆய்வு ஒரு ஆரம்பமே இதன் தொடர்ச்சியாக பாரதியாரின் முழு பாடல்களிலும் உள்ள முகாமைக் கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அந்த முயற்சியில் கலாநிதி பாரதி கென்னடி இறங்குவார் என்ற நம்பிக்கை உண்டு. அது சாத்தியமாகும் வேளையில் தமிழ் இலக்கிய உலகு பாரதியாரின் பாடல்களில் உள்ள பல விடயங்களை நவீன கருத்தியலுடன், அறிந்து கொள்ள முடியும்.

வாழ்த்துகளுடன்,

**மகுடம். வி. மைக்கல் கொலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

முன்னேற்றப் பாதைக்கான பாடல்களை இலகு தமிழ்வடிவில் எமக்குத் தந்தவன் முண்டாசுக் கவிஞன் பாரதி. பாரதியின் கவிதைகள் மானிட வாழ்வின் பன்முகத் தளங்களிலும் பிணைந்திருக்கின்றது. காதல், பக்தி, சுதந்திரம் என பல தளங்களிலும் வியாபித்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பாரதி கென்னடி அவர்கள் பாரதியின் படைப்பிலிருந்து சில கவிதைகளில் உள்ளமைந்துள்ள முகாமைத்துவக் கருத்துக்களை இன்றைய இளைய தலைமுறையினருக்காக தொகுத்துள்ளார்.

பாரதி கென்னடியின் இம்முயற்சிக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். முயற்சிகள் தொடரட்டும்.

**கலாநிதி. ச. ஜெயராஜா**
பீடாதிபதி,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

திருக்குறளில் கண்ட முகாமைக் கருத்துக்களை பாரதியின் பாடலில் காண முடியாதா எனும் எண்ணத்தின் வெளிப்பாடே இச்சிறுநூல்.

அன்பை, அறிவை, புதுமை புனைதலை, பாசத்தை, நேசத்தை, வீரத்தைத் தனது கவி வரிகளில் கூறிய பாரதியாரின் பாடல்வரிகளில் ஏன் முகாமைக் கருத்துக்களை காண முடியாது எனும் பசிக்கான ஒரு சிறு தீனி இது.

மகாகவி பாரதியின் கவிதை வரிகளின் மேல் கொண்ட மையலால்தான், எனக்கு பாரதி என்று பெயரிட்டதாக அப்பா கூறுவார். அப்போதெல்லாம் நான் கேட்பதுண்டு, நான் ஆண் என்று எதிர்பார்த்தீர்களா என்று, ஆனால் அப்பா எந்தப் பிள்ளை என்றாலும் இலக்கியத்தில் நாட்டம் கொண்டிருக்க வேண்டும் என்பார். அப்படியொரு வெறியராய் இருந்த அப்பாவின் கனவை என் துறையின் ஊடாக ஆய்வு செய்தால் என்ன அல்லது செய்யலாமா எனும் எண்ணத்திற்கான ஒரு முயற்சியே இது.

தேடிச்சோறு நிதம்தின்று என்று தொடங்கி பல வேடிக்கை மனிதர் போல் வீழ்வேன் என்று நினைத்தாயோ எனும் பாடலில் உள்ள வீரமும் ஊக்குவிப்பும் ஒவ்வொரு தனிநபரிடமும் உள்வாங்கப்பட்ட அவர் தம் நடத்தைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வரிகளிலுள்ள வெட்ட வெட்ட தளைப்பேன் என்னும் பிடிவாதம் தனிநபருக்கும் சரி, ஓய்ந்து போகும் நிறுவனங்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் ஒரு ஊக்கப்படுத்தும் வாக்கியம். பாரதியின் ஒவ்வொரு வரிகளும் உணர்வலைகளை தூண்டி நம்மைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்பவை. ஓடிவிளையாடு பாப்பா எனும் பாடலின் முதல் ஆறு பாடல்களை மாத்திரம் இங்கு முகாமைக்கண் கொண்டு பார்க்கின்றேன்.

இம்முயற்சி இனிமேலும் தொடரும்.
ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றிகள் பல.

**பாரதி கென்னடி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
முகாமைத்துவத்துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடல் - 1

ஓடி விளையாடு பாப்பா, - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

“ஓடி விளையாடு பாப்பா” எனும் பாரதியார் பாடலின் பாடல் வரிகளில் முதலாவது வரிகள் இவை. ஓடி விளையாடு பாப்பா என்று பாரதியார் குறிப்பிடுவது யாருமே ஒரு இடத்தில் அப்படியே இருந்து விடக்கூடாது. அதாவது மாற்றங்கள் இல்லாமல் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது என்பதாகும். இது வணிகத்திற்கும் பொருத்தமானது. வணிகமும் ஒரே இடத்தில் நாட்கணக்காக அவ்வாறே இருக்குமானால் அங்கு முன்னேற்றமோ முன்னோக்கிய நடவடிக்கைகளோ இடம்பெறமாட்டாது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆகவே 'ஓய்ந்திருத்தல்' என்பது விரும்பத்தகாத ஒரு விடயமாக கருதப்படுகிறது.

கும்பகர்ணன் என்பவர் எம்மவர்களின் இலக்கியங்களிலே நாம் அறிந்திருக்கக் கூடிய ஒரு பாத்திரம்தான். கும்பகர்ணன் ஓய்வெடுப்பதில் மிகவும் கெட்டிக்காரன். 06 மாதங்கள் அவன் உறக்கத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 'கும்பகர்ண அறிகுறி' 'Kumbaharna Syndrome' என நாம் குறிப்பிடுகின்ற ஓர் விடயம் தற்போது சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் பேசுபொருளாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. கும்பகர்ணன் தொடர்ந்தேர்ச்சியாக உறக்கத்தில் ஈடுபட்டுவிட்டு. திடீரென்று அவன் மேனியில் ஓர் லேசான குளிர் காற்று வீசுகின்றதனை உணர்கின்றான். என்னவென அதைப்பார்க்க கண்விழிக்கின்றான், பார்க்கின்றான். அவன் வீட்டின் யன்னல் திறந்திருக்கின்றது, எழும்பி வெளியில் சென்று பார்க்கின்றான். 06 மாதங்கள் கடந்த நிலையில் காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இவன் படுக்கின்ற பொழுது இருந்த காலநிலை இப்போது இல்லை. மாற்றங்களை சுதாகரித்துக் கொள்வதற்கே அவனுக்கு பல நாட்கள் ஆகின்றன. இவ்வாறுதான் வணிகத்திலும். சந்தையில் என்ன நடக்கின்றது, தம்மைச் சூழ உள்ள சூழல் என்னவாக காணப்படுகின்றது என்று பார்க்காது அங்கு என்ன நடக்கிறது என்று தெரியாமல் இருக்கும்போது போட்டியாளர்கள், போட்டி நிறுவனங்கள் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தக்கூடிய, முன்னோக்கி நகர்த்தக்கூடிய நிலமைகள் காணப்படுகின்றன. ஆகவே தான் இங்கு பாப்பா என்று உருவகப்படுத்தியுள்ளதை வணிகமாக பார்த்தோமேயானால், ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்ற வரிகளில் நீங்கள் ஒரே இடத்தில் சிக்கிக்கொண்டிருக்கக் கூடாது எனக் குறிப்பிடுவதனைக் காணலாம் எனக் கருதலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஓடி விளையாடிக்கொண்டே இருக்க வேண்டும், தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற முகாமைத்துவக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆங்கில பழமொழி 'உருளும் கல்லில் பாசி ஒட்டாது'. **(A Rolling stone gathers no moss)** அதாவது ஒரே இடத்தில் கிடக்கும் கல்லில் பாசி பிடிக்கும். அதே போலத்தான் ஓடிக்கொண்டே இருக்கக்கூடிய வணிகத்திலும் தேவையற்ற விடயங்கள் சேராது அல்லது குவியாது என்று கொள்ளலாம்.

அடுத்த இரண்டு வரிகளும் கூடி விளையாடு பாப்பா என்று தொடருகின்றன. கூடி விளையாடு என்கின்ற பொழுது தனியாக ஓரிடத்திலிருந்து விளையாடுவதை இங்கு குறிப்பிடவில்லை. கூடி விளையாடுவது அதாவது சேர்ந்து என்கின்ற பொழுது கண்டிப்பாக ஒருவர் இல்லாமல், ஒருவரை விட அதிகமான நபர்கள் சேர்ந்துதான் இங்கு விளையாடுவதை கூடி விளையாடு பாப்பா என்று பாரதி குறிப்பிடுகின்றார். இவ்வரிகள் நாம் ஒன்றாகச் சேர்ந்து விளையாட வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது. 'குழுச் செயற்பாடு' **(Team work)** என்று நாம் முகாமைத்துவத்தில் சொல்லக்கூடிய அணியாக செயற்படுவதனை இங்கு குறிப்பிடுகின்றார்.

தனிமரம் தோப்பாகாது என்பதை போல நாம் கூடி, அனைவருமாக சேர்ந்து விளையாடுவோமேயானால், எம்முள்ளே காணப்படுகின்ற தலைமைத்துவப்பண்புகள் அதிகரிக்கும். எம்முள்ளே காணப்படுகின்ற மென்திறன்கள் அதிகரிக்கும். நாங்களும் மேம்படுத்தப்படுவோம், உயர்வடைவோம் என்ற உயரிய கருத்துக்களை பாரதியார் கூடி விளையாடு பாப்பா என்ற வரிகளில் தெளிவுபடுத்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'ஒரு குழந்தையை வையாதே பாப்பா'. அதாவது குழந்தையை சின்னஞ் சிறுவர்களை வையாதே. ஏசாதே அதாவது தண்டிக்காதே/வஞ்சிக்காதே என்று கூறப்படுகின்றது. நாங்கள் இந்த மனித வள முகாமைத்துவத்தில் காண்கின்ற தண்டித்தல்/துன்புறுத்தல் (Punishment) என்ற விடயங்களை செய்தல் கூடாது. எடுத்த உடன் நாங்கள் அவர்களைத் தண்டிப்பதனூடாக நாம் அவர்களிடமிருந்து மேம்பட்ட கருத்துக்களை நிறுவன ரீதியாக பெற முடியாது என்பதற்கான வரிகளாக இங்கு நாங்கள் அதனை காணக்கூடியதாக உள்ளது. ஆகவே கூடி விளையாடு பாப்பா ஒரு குழந்தையை வையாதே பாப்பா என்ற கருத்துக்கள் வணிகத்திற்கும், வணிகச் சூழலிற்கும் பொருந்தக் கூடியனவாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடல் - 02

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா..

இது பாரதியார் பாடல்களில் வருகின்ற ஓடி விளையாடு பாப்பா எனும் பாடலின் இரண்டாவது பாடல் வரிகளாகும். இங்கு சின்னஞ்சிறு குருவி போல நீ திரிந்து பறந்து வா பாப்பா. சின்னஞ்சிறு குருவி சிறிதாக உருவத்தில் காணப்பட்டாலும் அது எல்லா இடங்களிலும் பறந்து சென்று வரக்கூடிய ஒரு பறவையாக காணப்படுகின்றது. அதே போன்றுதான் வணிகமும் வணிகச்சூழலில் காணப்படக்கூடிய எல்லா விடயங்களையும் அறிந்துகொள்ள வேண்டும். நாம் ஒரே இடத்தில் இருந்துகொண்டு இதனை செய்யமுடியாது. எனவே, எல்லா இடங்களிலும் திரிந்து பார்த்து பார்வையிடக்


noolaham.org | aavanaham.org

கூடிய ஒரு பறவைபோல எல்லா இடங்களும் திரிந்து தாமே செய்யக்கூடியவர்களாக முகாமையாளர்கள் இருக்கவேண்டும் என்பதே இந்த வரிகளின் ஊடாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒரு அறையினுள் இருந்து முகாமை செய்வதனை விடுத்து சுற்றித் திரிவதனூடான முகாமைத்துவம் (Management by wandering around - MBWA) முகாமைத்துவக் கருத்தாகக் காணப்படுகின்றது. வண்ணப்பறவைகளைக் கண்டு நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா. நல்ல அழகான வண்ண வண்ணப்பறவைகளைக் கண்டு அதனைப்பார்த்து நாங்கள் சந்தோசப்படவேண்டும். நாங்கள் ஒரு முகாமைத்துவக்கருத்தாக இதனைப் பார்போமேயானால் எந்த ஒரு சிறிய விடயத்தினை நாங்கள் கண்டாலும் ஒரு சிறிய பறவையைத் தனும் கண்டாலும் சந்தோசப்படவும் கொண்டாடவும் பழகிக்கொள்ள வேண்டும். சின்ன விடயத்தினையும் சந்தோசமாகக் கொண்டாடும் வழக்கத்தினைக் கொள்ள வேண்டும். மகிழ்ச்சியினைக் கொண்டாடும் போது மனதில் மன அழுத்தம் இல்லாதொழிகின்றது அல்லது குறைகின்றது. மன அழுத்தம் தற்கால சமூகத்தினுள் பின்னிக் கிடக்கும் ஒரு வியாதி. அதனைத் தளர்த்துவதற்கு முக்கியமாகத் தேவையானது நகைச்சுவை. நகைச்சுவையின் ஊடாக சிரிப்பு, மனமகிழ்ச்சி ஏற்படுகின்றது. இதைத்தான் அன்று பாரதியும் மனதில் மகிழ்ச்சி கொள் என்று எடுத்துரைத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடல் - 03


கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

இங்கு 'கொத்தித் திரியுமந்தக் கோழி அதைக்கூட்டி விளையாடு பாப்பா' எனும் வரிகள் கோழி எங்குமாகக் கொத்திக் கொண்டு வருகின்றதொரு பறவை. அதனிடம் எமது வீராப்புக்களைக் காட்டாது அதனைச் சேர்த்து அரவணைத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்கின்றார். மேலுமாக, உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்ற கருத்தினையும் முன்வைக்கின்றார். 'கோழி' ஐயும் அதனது குஞ்சு களையும் பற்றி பல்வேறு பழமொழிகள் பல்வேறு நாடுகளில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக பல தேசங்களில் புழக்கத்திலுள்ள பழமொழிகளில்வரும் கோழியை பாரதியார் ஏன் தெரிவு செய்ய வேண்டுமெனில் அதிலிருந்து நாம் பல விடயங்களைப்புரிந்து கொள்ள முடியும் என்பதனாலாகும். பல இடங்களிற்கும் திரிந்து வரக்கூடிய 'கோழியை' அதாவது கோழியை ஒத்த குணமுடைய நபர்களை, பல விடயங்களில் ஈடுபடக்கூடிய ஆட்களை நாம் எப்போதும் நம்முடனே வைத்துக் கொள்ளல் வேண்டும்.

'எத்தித் திருடுமந்தக் காக்காய்', அதற்கு இரக்கப்படவேணும் பாப்பா எனும் வரிகளில் அன்பினை எடுத்தியம்புகின்றார் பாரதி. காகம் அதிகளவில் அதனது உணவை எடுத்துக் கொள்ளாது. பாரிய அழிவுகளை ஏற்படுத்தாது. அதனது வயிற்றுக்குப் பொருத்தமான அளவுதான் உட்கொள்ளும். காக்காய் எத்தித் திருடும், தின்னும், அதனால் மானிடருக்கு நட்டம் ஏற்படும். இது இயற்கை. இது சாதாரணமாக இடம் பெறுவதாகும். இத்தகைய நட்டத்தினை நாம் சாதாரண நட்டம் என்று வரையறுக்கின்றோம். இத்தகைய நட்டங்களை எவ்வாறு கணக்கிலிட வேண்டும் என்றெல்லாம் கணக்கீட்டில் பதிவுகள் காணப்படுகின்றன. இது தவிர்க்க முடியாததாகும். எனவே இதனை நாம் கருத்தில் எடுத்து வணிகத்தினைக் கொண்டு செல்லல் வேண்டும். அசாதார நட்டம் ஏற்படும் போது அவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். சாதாரண நட்டம் வழமையில் இடம்பெறக் கூடியதொன்று. அதனை அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். ஆக உயிர்களிடத்தில் அன்பைச் செலுத்தும் எனும் அறிவுரையை விட்டுச் செல்கிறார் பாரதி.


noolaham.org | aavanaham.org



## பாடல் - 04

பாலைப் பொழிந்துதரும் பாப்பா, - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.


இங்கு பாலைப்பொழிந்து தருகின்ற பசுவைப்பற்றி பாடுகின்றார். பால் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய மிக முக்கியமான செல்வம் இந்த செல்வத்தைத் தரக்கூடிய பசு மிகவும் நல்லது. இதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் பாலை மட்டும் நாங்கள் பார்த்து குதூகலிக்காமல், அதைத் தரக்கூடிய பசுவையும் பார்க்க வேண்டும். மிகக்கவனமாக நாங்கள் சிந்திப்போமேயானால் பசு, பாலைத் தரக்கூடிய ஒரு மூலம். வணிகத்திலும் முகாமை செய்யும் போது பாலைத் தருகின்ற பசுவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவதானிக்க வேண்டும். சந்தைத் தந்துரோபாயங்களை கற்கும் போது நாம் காணும் பி.சீ.ஜீ தாயத்திலும் (**BCG Matrix**) பணம் தரும் பசு (**Cash Cow**) என்று ஒரு கட்டத்தினை அழைப்பதுண்டு. அது முதலீட்டிற்கான வருவாயின் மூலதாரம். அறுவடையின் காலம். அப்படித்தான் பசுவும். பாலைத்தந்து நமக்கான இலாபத்தினை/ அறுவடையினை தருகின்றது. முதலீட்டாளர்கள் அறுவடையினை அவதானிப்பதுடன் அறுவடையின் மூலாதாரத்தினையும் அவதானிக்க வேண்டும் என்று இங்கு இயம்புகிறார் முண்டாசுக் கவிஞர்.

'வாலைக்குழைத்து வரும் நாய்தான் அதுமனிதனுக்குத் தோழனடி பாப்பா' எனும் வரிகளில் நாய் மனிதராகப்பட்ட அனைவருக்கும் தோழனாகக் காணப்படுவதை சித்தரிக்கின்றார். அதாவது திரும்ப திரும்ப அடித்து துரத்தி விட்டாலும் சில ஊழியர்கள் திரும்ப வந்து எங்களுடைய காலடியில் நிற்பார்கள் நாங்கள் அவர்களை வேலையிலிருந்து நிறுத்தம் செய்தாலும் கூட பண்ணி இருந்தாலும்கூட எங்களுடைய காலடியில் வந்து தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். அப்படிப்பட்ட ஒரு கருத்தினைத்தான் இவ்வரிகள் குறிப்பிடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடல் - 05

வண்டி இழுக்கும்நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மைஆடு, - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

'வண்டி இழுக்கும் நல்ல குதிரை' குதிரையால் வண்டி இழுக்க முடியும். அதாவது முகாமைத்துவக் கருத்தின் பிரகாரம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமையும், அவர்களுக்குரியதான திறன்களும் உண்டு. ஆகவே குதிரை வண்டி இழுக்கும் அதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும்.

'நெல்லு வயலில் உழுது வரும் மாடு', வயலில் உழுதுகொண்டு வருகிறது மாடு. அதற்கு வண்டி இழுப்பதை விட வயலை சிறப்பாக உழ முடியும். அதேபோன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைக்கு வயலில் உழ முடியாது. அவரவரை அவரவர் வேலைக்கு நாங்கள் அமர்த்த முடியும். 'அண்டிப்பிழைக்கும் நம்மை ஆடு'. ஆட்டைப் பொறுத்தமட்டில் நம்முடன் கூடவே இருந்து வாழக்கூடியது. அப்படிப்பட்ட நபர்களையும் நாங்கள் எங்கள் வணிகத்தில் வைத்துகொள்ள வேண்டும் 'இவை ஆதரிக்க வேண்டுமடி பாப்பா' இவற்றைப் போன்றவர்களை அறிந்து கொள்ள வேண்டும் அவர்களின் பண்புகளை இயல்புகளை தொடர்ந்து எங்களுடைய வணிகத்தில் நாங்கள் வைத்துக்கொள்ள வேண்டும் .

மனித வள முகாமையில் நாம் பல்வேறுபட்ட திறனுள்ள நபர்களைக் காணுகின்றோம். ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள். ஒவ்வொருவருக்கும், பல்வேறு திறன்கள், வித்தியாசமான திறமைகள் உள்ளன. அவற்றை நாம் அவதானித்து எமது நிறுவனத்திற்கு எவற்றை எப்போது பயன்படுத்தலாமோ அவற்றை அதற்குப் பயன்படுத்துவது சிறப்பானது என அறிவுரை வழங்குமுகமாக அமைகின்றது.

அப்பாடல்வரிகள் உளவியலாளரான ஜோன் கொலன்ட் **(John L. Holland)** 1959 களில் ஆறுவிதமான ஆளுமை வகைகளையும் அவற்றிற்கும் பொருத்தமான தொழில் தேர்வுகளையும் குறிப்பிட்டு சில ஆளுமைகட்கு சில தொழில் தேர்வுகள் தான் பொருத்தமானது. அவ்வாறு பொருந்தினால்தான் சிறப்பிக்கும் என்கிறார். ஆக அதனையேதான் பாரதியாரின் பாடல்வரிகள் உறுதிசெய்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடல் - 06

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

இது பாடல் ஆறு. இந்தப்பாடலில் 'காலை எழுந்தவுடன் படிப்பு' அதாவது நாங்கள் படிக்க வேண்டிய அல்லது கற்க வேண்டிய விடயங்களை அதி காலையிலேயே செய்ய வேண்டும். பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு அதாவது அழகியல் என அழைக்கக்கூடிய இந்த இசைத்துறையில் அல்லது நாடகத்துறையில் அல்லது நல்ல பொழுது போக்கான விடயங்களில் எங்களுடைய மனதை நாங்கள் ஈடுபடுத்த வேண்டும். யப்பான் போன்ற நாடுகளில் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றவுடன் பாடசாலைகளில் இசை இசைக்கப்படுகின்றது. மாணவர்கள் அனைவருமே இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இசையைக் கேட்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. ஏன் என்றால் அவர்களுக்குள்ளே காணப்படுகின்ற திறமைகளை திறன்களை விருத்தி செய்யக்கூடிய நோக்கத்திலேயே இது இடம்பெறுகின்றது. அப்போதுதான் அவர்களது கற்பனாசக்தி வளர்ச்சியாகும். எங்களுடைய மூளையில் இருக்கின்ற நரம்புகள் அனைத்தும் தொழில்படும். அந்தத் தொழில்பாடுகளின் ஒரு விடயமாகத்தான் ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு சிறப்பான கற்பனை சக்தி ஒரு சிறப்பான ஞாபகசக்தியைக் கொண்டிருக்கிறது. இது ஆசியா போன்ற நாடுகளில் மிகவும் அதி கூடிய அளவில் காணப்படுவதாகவும் வளர்ச்சி அடைந்த நாடுகளில் சற்றுக் குறைவாகக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. எனவே தான் எம் வணிகமும் புத்துருவாக்கம், புதுமைபுனைதலில் ஈடுபட இத்தகைய முயற்சிகளை வலியுறுத்துகிறார் பாரதி.

'மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா' எனும் வரிகள், மாலை முழுவதும் விளையாட வேண்டும். அதாவது நன்கு கைகளை கால்களை அசைத்து நீங்கள் செல்லும் இடங்களுக்குச்சென்று விளையாட வேண்டும். அப்பொழுதுதான் உடல் புத்துணர்ச்சி தரும் ஆகவே நாங்கள் பொழுதுபோக்காக **(Recreation)** என்று சொல்லக்கூடிய புத்துணர்ச்சி தரும் செயல்பாடுகளை மாலை முழுவதுமாகச் செய்ய வேண்டும். இவ்வாறான செயல்பாடுகள் மூலமே நல்லதொரு சமூகத்தையும் சிறந்த வணிகத்தையும் கட்டி எழுப்ப முடியும் என்று மகாகவியின் கருத்து.


noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி இலங்கைக் கணக்காளர் சேவையில் (SLAcS) இலும் இலங்கை நிர்வாக சேவையிலும் (SLAS) கடமையாற்றி தற்போது கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார்.

இவர் தனது தொழில் ரீதியான சேவைக்கு அப்பால் எழுத்து, நடனம், நாடகம், இலக்கிய விமர்சனம், சமூக சேவை போன்ற துறை களில் அதீத ஈடுபாடும், செயற்பாடும் கொண்டவர்.

சர்வதேச அரிமா கழகத்தின் 306C2 இல் 2020/2021ம் ஆண்டுக் கான பிராந்தியம் ஒன்பதில் பிராந்தியத் தலைவியாக தனது ஆக்க பூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் இவரின் "முண்டாசுக் கவியின் பாப்பாப் பாடலில் முகாமைக் கருத்துக்கள்" என்ற இச்சிறு நூல் பாரதியார் பாடல்களில் முகாமைக் கருத்துக்கள் என்ற ஓர் ஆய்வு முயற்சியின் ஆரம்பப் புள்ளியாகும்.

**– மகுடம். வி. மைக்கல் கொலின்**

ISBN: 978-955-4041-25-7

9 789554 041257

Wanasinghe Printers, Batticaloa, 065 2227170

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org